# இடர்கால வாராந்தப் பாடசாலை
# செயற்பாட்டுப்பத்திரம்

## க.பொ.த. (உ/த) – தரம் -13

01) பின்வரும் செய்யுளை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

**அ. அறுகுளத் துகுத்து மகல்வயற் பொழிந்தும்**
**உறுமிடத் துதவா துவர்நில மூட்டியும்**
**வரையா மரபின் மாரி போலக்**
**கடா யானைக் கழற்காற் பேகன்**
**கொடைமடம் படுதலல்லது**
**படை மடம்படான் பிறர்படை மயக்குறினே!**

1. இப்பாடலின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக
2. கொடைமடம், படைமடம் என்பவற்றை விளக்குக.
3. இப்பாடலில் கையாண்டுள்ள அணியினை விளக்குக
4. சங்ககால புறத்திணை மரபின் சிறப்பம்சங்கள் எவையெனக் குறிப்பிடுக.

ஆ. **வாரலெஞ் சேரி தாரனின் றாரே**
**அலரா கின்றாள் பெரும காவிரிப்**
**பலராடு பெருந்துறை மருதொடு பிணித்த**
**ஏந்து கோட்டியானைச் சேந்தன் தந்தை**
**அரியலம் புகவி னந்தோட்டு வேட்டை**
**நிரைய வொள்வா ளினையர் பெருமகன்**
**அழிசி யார்க்காடன்னவிவள்**
**பழிநீர் மாணலம் தொலைவன கண்டே**

**அ.** இச்செய்யுளின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக

**ஆ.** “ஆர்க்காடு அன்ன இவள் நலன்” என்ற அடியினூடாக புலவர் புலப்படுத்த விளைந்த கருத்து யாது?

**இ.** தோழி என்ற பாத்திரம் பெறும் முக்கியத்துவம் யாது?

**ஈ.** இச்செய்யுளில் இடம்பெறும் சங்ககால அகத்திணைப் பண்புகளை எடுத்துரைக்க.